

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) சென்னையில் நடை பெற்ற, பேராசிரியர் மருத்துவர் கே.கே. இராமலிங்கம் அவர்களின் 90ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும், முன்னாள் கேரளா ஆளுநருமான பி. சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.7.2025) காவல் உதவி ஆய்வாளர் முரளிதரன் (ஓய்வு) அவர்களின் மகன் சந்தோஷ்குமார், சென்னை, பெரவள்ளூரில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சென்னை அப்போலே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதையொட்டி, மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல் நலம் விசாரித்து, மருத்துவரிடம் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

### மக்கள் போற்றும் முதல்வர் திராவிட மாடல் ஆட்சியில்

# திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி திருக்கோவில் மகா குடமுழுக்கு விழா!

## தமிழில் நடந்தது: முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி பாராட்டு!

*மதுரை, ஜுலை. 15 -*

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் முதல் படை வீடான சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பை தொடர்ந்து மகா குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக பல லட்சம் பேர் மகிழும் வகையில் நடைபெற்று முடிந்தது

வரலாற்று சிறப்புமிக்க இக்கோவில் மலையை குடைந்து திருமுருகனின் உருவம் கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்ட மலைக்குகை குடவறைக் கோவிலாகும்

பிரசித்தி பெற்ற இக்கோவிலில் கடந்த 2014ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெற்ற நிலையில் தற்போது வெகு சிறப்பாக கோபுரங்கள் உள்ளிட்ட அனைத்தையும் புதுப்பித்து எல்லோரும் போற்றும் வகையில் மகா குடமுழுக்கு விழா நடத்த திராவிட மாடல் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் துறை அதிகாரிகள் குடமுழுக்கு பணிகளை துவக்கி அதிக கவனம் செலுத்தி திருப்பணிகளை அவ்வப்போது பார்வையிட்டு பணிகள் துரிதமாகவும் நேர்த்தியாகவும் நடைபெற ஆலோசனைகள் வழங்கினார். மேலும் திருப்பணி செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு முதல்வருக்கும் அவ்வப்போது தெரிவித்து வந்துள்ளனர்.

மகா குடமுழுக்கு நெருங்கிய நிலையில் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர் உள்ளிட்டோர் நேரடியாக பல முறை ஆய்வுகள் நடத்தினார்கள்

இந்நிலையில் தமிழ் கடவுள் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மகா குடமுழுக்கு விழா நேற்று (14.07.2025 திங்கட்கிழமை) அதிகாலை 5:30 மணிக்கு அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தமிழில் வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது

இந்த குடமுழுக்கு விழாவில் மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையர் சிற்றா விஜயன், மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், அறங்காவல் குழு தலைவர் சத்யபிரியா பாலாஜி, அறநிலையத்துறை அதிகாரிகள், அறங்காவல் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றார்கள்.

மேலும் 3 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### கருநாடக மாநிலம் -

# கோலார் தங்க வயலில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் நடைபெற்றது!

*கர்நாடகா, ஜுலை, 15-*

கருநாடக மாநிலம் கோலார் தங்கவயல் தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 -ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 13.07.2025, ஞாயிற்றுக்கிழமை காலை தங்கவயல் கிங் ஜார்ஜ் அரங்கத்தில் நடைபெற்றது, விழா துவக்கத்தில் நாராயண மூர்த்தி தமிழ் வாழ்த்து பாடினார், கூட்டத்திற்கு கருநாடக மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமை வகித்தார், க.பெருமாள், இரா.சூரியன், மு. பழனி பிரகாஷ், ஜி.ரவீந்திரன், வி.சிவா, பி. முருகன் முன்னிலை வகித்தனர், பொன் சாரங்கபாணி வரவேற்புரை ஆற்றினார், அருணாசலம், வ.முனிரத்தினம், வழக்கறிஞர் பி. மணிவண்ணன் வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தின் தலைமை ஏற்று ந. இராமசாமி உரையாற்றுகையில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உலகம் வியக்கும் அளவிற்கு மக்கள் நலன் காத்து திராவிட மாடல் ஆட்சியின் மாண்பை மற்ற மாநிலங்கள் பின்பற்றி வாழ்த்தும் அளவிற்கு தமிழ்நாடு வழி நடத்தும் கழக ஆட்சிக்கு குந்தகம் விளைவித்து, பொய் உரைகளை கூறி மக்கள் விரோத கூட்டணி கட்சியினர் நடத்தும் அரசியல் கூத்தை முறியடித்து வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறும் தமிழக சட்டமன்ற தேர்தலில் மக்களின் பேராதரவுடன் வாக்குகளைப் பெற்று 7வது முறையாக மீண்டும் தமிழகத்தில் கழக ஆட்சி ஏற்படுத்தவும்

தளபதியார் ஸ்டாலின் மீண்டும் முதல்வராக்க மகத்தான மக்கள் ஆதரவு வாக்குகளை சேகரிக்கும் பணியினை கருநாடகத்தில் வாழும் கழக தோழர்கள் கடமை என்பதை உணர்ந்து அயராது உழைத்து வாக்குச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு, தமிழகத்தில் உள்ள கருநாடக மாநில கழக தோழர்களின் குடும்பத்தார்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு திராவிட மாடல் அரசியல் பெருமைகளை நினைவூட்டி தி.மு.க கழக கூட்டணிக்கு வாக்களிக்க வலியுறுத்தி கடிதங்கள் எழுதியும், தொலைப்பேசியில் தொடர்பு கொண்டும் முடிந்த அளவுக்கு நேரடியாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பணியை இன்று முதல் நாம் துவக்க வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானமாக முன்மொழிந்து உரையாற்றினார்.

இந்த தீர்மானத்தை வலியுறுத்தியும், தமிழகத்தில் தளபதியாரின் நல்லாட்சி குறித்தும், திராவிட மாடல் ஆட்சி தமிழக மக்கள் பெற்று வரும் நிறைவான நன்மைகளையும், பெருமைகளையும் விளக்கியும், தலைமை கழக பேச்சாளர் ஆனைமலை அல்தாப், கருநாடக மாநில தி.மு.க. இலக்கியணிச் செயலாளர் போர் முரசு கதிரவன், கிருஷ்ண கிரி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.கிரி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இறுதியில் தொ.மு.ச. பேரவை மாநில செயலாளர் த. கண்ணையன் நன்றி கூறினார், அரங்கத்தில் நிறைந்திருந்த கூட்டத்தினருக்கு நல உதவிகள் வழங்கி கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.



கருநாடக மாநிலம் கோலார் தங்கவயல் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 13.07.2025, ஞாயிற்றுக்கிழமை காலை தங்கவயல் கிங்ஜார்ஜ் அரங்கத்தில் நடைபெற்றது, விழா துவக்கத்தில் நாராயண மூர்த்தி தமிழ் வாழ்த்துப் பாடினார், கூட்டத்திற்கு கருநாடக மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமை வகித்தார், க.பெருமாள், இரா.சூரியன், மு.பழனி பிரகாஷ், ஜி.ரவீந்திரன், வி.சிவா, பி.முருகன் முன்னிலை வகித்தனர், பொன். சாரங்கபாணி வரவேற்புரை ஆற்றினார், அருணாசலம், வ.முனிரத்தினம், வழக்கறிஞர் பி.மணி வண்ணன் வாழ்த்துரை வழங்கினர்.

# தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் சு. கல்யாணசுந்தரம், எம்.பி., அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **சாக்கோட்டை க.அன்பழகன்**, எம்.எல்.ஏ., (நாக்கியன் கோவில் மெயின் ரோடு, சாக்கோட்டை அஞ்சல், கும்பகோணம், தஞ்சை மாவட்டம்.) அவர்கள் தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 14.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் - மகளிர் சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்!

## சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில் – சுய உதவிக்குழுவினருடன்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடி ஆய்வு!

**திருவண்ணாமலை, ஜுலை 15 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் காண வேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையுடன் முதன் முறையாக 1989–ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் அமைச்சராக, துணை முதல மைச்சராக இருந்தபோது மாவட்டந் தோறும் சென்று லட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கணக்கு புத்தகம் தொடங்கி வைத்து, பொருளாதாரக் கடன், சுழல் நிதிக் கடன் உள்ளிட்டவற்றை வழங்கி பெண்கள், வங்கிகளுக்கு தன்னம்பிக்கையுடன் சென்று தாங்களே வங்கிப்பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு உயர்த்தினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு அமைந்தது முதல் தற்போது வரை தமிழ்நாடு முழுவதும் 1,49,767 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் 53,74,000 உறுப்பினர்களுடன் 4,76,000 மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 19,12,927 குழுக்களைச் சேர்ந்த 2,48,68,051 உறுப்பினர்களுக்கு 1,20,240 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரு முக்கிய அங்கமாக முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10,51,976 மகளிருக்கு 5,125.33 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு, மகளிர் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 16 மகளிர் சுய உதவிக் குழுக்கள், 1 முதியோர் குழு சுய உதவிக் குழு, 1 மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழு என மொத்தம் 18 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 246 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு பல்வேறு நிர்வாக பயிற்சிகளும், வேலைவாய்ப்பு பயிற்சிகளும் அளிக்கபட்டு வேலைவாய்ப்புகள் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று திருவண்ணா மலை மாவட்டம் சு. ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு. ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்ட மைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

அப்போது இவ்வூராட்சியில் குழு உறுப்பினர்கள் கரும்பு விவசாயம், பூந்தோட்டம், காய்கறி சாகுபடி உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தொழில்களும், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தையல், துணி வியாபாரம் செய்தல் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி மத்திய மாவட்ட நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி